பணியிடங்களை நிரப்புவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 216 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா வரிசை எண் 217, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

217—

புதிய வகுப்பறைகள் மற்றும் ஆய்வகம்

***78460—டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி, கடையநல்லூர் வட்டம், புளியங்குடியில் உள்ள ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு புதிய வகுப்பறைகள் மற்றும் ஆய்வகம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்கி, தங்கள் அனுமதியோடு விடையளிக்கிறேன். வாசுதேவநல்லூர் தொகுதி, கடையநல்லூர் வட்டம், புளியங்குடியில் உள்ள (குறுக்கீடுகள்) அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 416 மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: 22 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரம் முடியட்டும். (குறுக்கீடுகள்)

2023 அக்டோபர் 10]

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: இப்பள்ளியில் 15 வகுப்பறைகள் மற்றும் 3 ஆய்வகங்கள் உள்ளன. (குறுக்கீடுகள்) இப்பள்ளியில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதில் ஒன்றும் குற்றமாக அவர் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) இருக்கிற நிலைமையைச் சொன்னார்கள், (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: போதுமான வகுப்பறைகள் மற்றும் ஆய்வக வசதி உள்ளது என்பதைத் தங்கள் மூலமாக சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதில் ஒன்றும் குற்றம் இல்லையே! இருக்கிற நிலவரத்தைச் சொன்னார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள். குற்றச்சாட்டு எதையும் அவர்கள் சொல்லவில்லை. இருந்த நிலவரத்தைச் சொன்னார்கள் அவ்வளவுதான்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: புளியங்குடி என்பது, தென்காசி மாவட்டம், வாசுதேவநல்லூர் தொகுதியில் உள்ள ஒரு பெரிய நகரம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இல்லை, டாக்டர். அதாவது, கேள்வி கேட்பதற்கு (குறுக்கீடு) திரு. முனுசாமி, கேள்வி கேட்பதற்கு உரிமை உண்டு. இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், சபாநாயகருடைய கவனத்தை யாராவது ஒருவர் ஈர்த்தால், அதற்கு அவர் பதில் சொல்வார். ஒரே நேரத்தில் (குறுக்கீடு) தயவுசெய்து நான் சொல்வதைக் கேளுங்கள். ஒரே நேரத்தில் (குறுக்கீடு) மொத்தபேரும் எழுந்து பேசினால் என்ன செய்ய முடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *முதலில் உட்காருங்கள். அவர் சொல்வதை முதலில் கேளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், சொல்லுங்கள்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டு கூடாது என்ற மரபை பேரவைத் தலைவர் அவர்களே பல முறை சொன்னீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கடந்த கால ஆட்சியிலே, பெயரளவில் அரசாணை பிறப்பித்திருக்கிறார்கள் என்று சொன்னால், விவாதத்திற்குத் தயாராக இருக்கிறேன். எந்த மருத்துவமனையில் பெயரளவிற்கு, பெயர்ப் பலகை மட்டும் மாற்றப்பட்டுள்ளது? இவர் சொன்ன கறம்பக்குடியில் ரூபாய் 2 கோடி அளவிற்குக் கட்டடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கட்டடம் கொடுக்கப்பட்டு அது திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. அங்கே மருத்துவர்கள் இல்லையென்று பொதுமக்கள் 25 நாட்களாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு மருத்துவர்களை நியமித்தால், நான் பாராட்டத் தயாராகயிருக்கிறேன். அதை விடுத்து. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும், உட்காருங்கள். மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.(குறுக்கீடு)*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கேள்விக்கு பதில் இல்லாமல், நீங்கள் விவாதத்திற்கு அழைத்தால் நாங்கள் தயாராக இருக்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மருத்துவமனையின் தரம் உயர்த்துதல் என்பது, கட்டடங்களைக் கட்டுவது என்பதையும் கடந்து, மருத்துவர்களைப் புதிதாக நியமிக்க வேண்டும். ஓர் ஆரம்ப சுகாதார நிலையமாக இருக்கிறபொழுது, ஒரு மருத்துவர், இரண்டு மருத்துவர்கள் இருப்பார்கள். வட்டார மருத்துவமனையாகத் தரமுயர்த்தும்போது 7 அல்லது 8 மருத்துவர்கள் தேவைக்கேற்ப நியமிக்கப்படுவார்கள். அந்த மருத்துவப் பணியிடங்களை உருவாக்க வேண்டும். இந்த மாதிரி, எந்த மருத்துவப் பணியிடங்களையும் உருவாக்காமல், 130 மருத்துவமனைகள் தரமுயர்த்தப்பட்டன என்பது 7, 8 ஆண்டுகளுக்கு முன்னால்*

2023 அக்டோபர் 10]

நடைபெற்று இருக்கிறது. இந்த 130 மருத்துவமனைகளில் கறம்பக்குடியும் ஒன்று. 130 மருத்துவமனைகளுக்கான பட்டியலைத் தங்களிடத்தில் தருகிறேன். மாண்புமிகு உறுப்பினரிடத்தில் தந்து, இவற்றையெல்லாம் அவரே ஆராய்ந்து, இத்தனை மருத்துவமனைகளைத் தரமுயர்த்தியிருக்கிறோமே (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றிற்கு மருத்துவர்களை நியமித்திருக்கிறோமா, செவிலியர்களை நியமித்திருக்கிறோமா, மருத்துவம் சார்ந்த களப் பணியாளர்களை நியமித்திருக்கிறோமா என்பது குறித்து அடுத்த கூட்டத்திலோ அல்லது நாளையதினமேகூட அவர் தாராளமாகப் பதில் சொல்லலாம்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள். (குறுக்கீடு) திரு. வி.பி. நாகைமாலி உட்காருங்கள். (குறுக்கீடு) அது முடிந்துபோய்விட்டது. (குறுக்கீடு) அடுத்தாற்போல் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) இப்போது தேவையில்லை. இது* debate *இல்லை,* please. *(குறுக்கீடு) திரு. நாகைமாலி உட்காருங்கள். (குறுக்கீடு)*

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புளியங்குடி என்பது, தென்காசி மாவட்டம், வாசுதேவநல்லூர் தொகுதியில், ஒரு பெரிய நகராட்சியாக. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தயவுசெய்து கொஞ்சம் உட்காருங்கள்.*

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: *தென் இந்தியாவின்* Oxford *என்று சொல்லக்கூடிய பாளையங்கோட்டையைப்போல், தென்காசி மாவட்டத்தின்* Oxford *என்று சொல்லக்கூடிய அளவிற்கு புளியங்குடியில் பள்ளிக் கட்டடங்கள் பெருகியிருக்கின்றன; பள்ளிக் கல்வி நிலையங்கள் அதிகரித்திருக்கின்றன. ஆயினும், 1949–ல் அரசால்* Board High School *என்று சொல்லக்கூடிய இந்த ஆண்கள் மேல்நிலைப் பள்ளி துவக்கப்பட்டது. 1957 ஆம் ஆண்டில் இரண்டு புதிய. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *டாக்டர், வரலாறு வேண்டாம். பள்ளிக்கூடத்திற்கு வகுப்பறை கேட்டிருக்கிறீர்கள்.*

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2023 அக்டோபர் 10

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: ஆம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொஞ்சம் சுருக்கமாகச் சொல்லுங்கள். இத்தனை மாணவர்கள் இருக்கிறார்கள், இத்தனை ஆசிரியர்கள் இருக்கிறார்கள். . .

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: அந்தப் பள்ளி எவ்வளவு சிறப்புமிக்க பள்ளி என்பதைச் சொல்லி, வகுப்பறைகள் வேண்டும் என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது தெரியும். அது உங்களுக்கும் தெரியும், ஊருக்கும் தெரியும், நாட்டுக்கும் தெரியும். கேள்வியை மட்டும் கேளுங்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: எனக்குத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொஞ்சம் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மொத்தத்தில், அங்கே தனியார் பள்ளிகள் பெருகி வருகின்றன. அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி ஒன்றுதான் இருக்கிறது. 1957-ல் மாடசாமி சேனையர், சிதம்பரம் சேனையர் என்ற இரண்டு பெருமகனார்கள் சேர்ந்து 10 ஏக்கர் நிலத்தைத் தானமாகக் கொடுத்தார்கள். தற்போது அந்த நிலத்தின் சந்தை மதிப்பு 200 கோடி ரூபாய் ஆகும். அதிலுள்ள main கட்டடம் சிதிலமடைந்திருக்கிறது. அந்த வளாகத்திற்குள் போதிய வகுப்பறைகளை அங்கும், இங்கும் பல்வேறு இடங்களில் கட்டியிருக்கின்றார்கள். நானும் அந்தப் பள்ளியில் படித்தவன். அதுபோன்று மத்திய அமைச்சர்கள் எல்லாம் படித்திருக்கின்றார்கள். DGP எல்லாம் படித்திருக்கிறார்கள். சிதிலமடைந்திருக்கின்ற அந்த main building-ல். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர், debate இல்லை. கேள்வி கேளுங்கள். கட்டடம் வேண்டுமென்று கேட்கிறீர்கள், அவ்வளவுதானே!

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: அந்தப் பள்ளியின் சிதிலமடைந்த அந்தக் கட்டடத்தைச் சரி செய்து, Flooring, மேற்கூரை, windows, doors எல்லாம் போட்டுத் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இதற்கு மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

2023 அக்டோபர் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு இன்னும் ஒரு கேள்வி இருக்கிறது. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் அவர்கள் சொன்னதுபோல, அது மிகவும் பழமை வாய்ந்த ஒரு பள்ளிக்கூடம்தான். ஏற்கெனவே NABARD திட்டத்தின் மூலமாக 2010 ஆம் ஆண்டு 10 வகுப்பறைகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆய்வகங்கள் என்று வருகின்றபோது இயற்பியல், வேதியியலுக்கு என்று ஓர் ஆய்வகம். உயிரியலுக்கு ஓர் ஆய்வகம். அதேபோன்று உயர்நிலைப் பிரிவிற்கென்று தனியாக ஓர் அறிவியல் ஆய்வகம் என்று ஏற்கெனவே அவை செயல்பாட்டில் இருந்து கொண்டிருக்கின்றன.

அடுத்து, உட்கட்டமைப்பு என்று வருகின்றபோது கழிவறைகளாக இருந்தாலும் சரி, அது மாணவர்களுக்குத் தேவையான எண்ணிக்கையில் இருந்துகொண்டுதான் இருக்கின்றது. இருந்தாலும், இன்றைக்கு நீங்கள் சொல்லியிருக்கின்றபடியால், அங்கேயிருக்கின்ற எங்களுடைய CEO மூலமாக அதற்கான கருத்துகள் பெறப்பட்டு, உள்ளபடியே அதுபோன்று தேவை இருந்தது என்று சொன்னால், அதற்குரிய முக்கியத்துவம் வழங்கப்பட்டு, அதனை உடனடியாகக் கட்டித் தருவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் நம்முடைய அரசாங்கம் செய்துதரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு மிக்க நன்றி. அங்கே தனியார் பள்ளிகள் புற்றீசல்போல் முளைத்துக் கொண்டேயிருக்கின்றன. அரசு பள்ளிகள் சிறப்பாக நடைபெறுவதற்கு infrastructure-ஐ இன்னும் அதிகரிக்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்வதோடு, அதைச் செய்து தர வேண்டுமென்றும் வேண்டிக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததிலிருந்து, குறிப்பாக கல்வியும், மருத்துவமும் தனது இரு கண்கள் என்று இன்றைக்கு உழைத்துக் கொண்டிருப்பவர் நம் தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் இன்றைக்கு அவருடைய வழிகாட்டுதலின்படி, அரசு பள்ளி என்பது வறுமையின் அடையாளம் அல்ல, அது பெருமையின் அடையாளம் என்பதை எல்லாவிதத்திலும் நிறைவேற்ற வேண்டுமென்கின்ற வகையிலேதான் இன்றைக்கு நாங்களும் உழைத்துக் கொண்டிருக்கின்றோம். Infrastructure என்று வரும்போது ஏற்கெனவே 418 பள்ளிகளுக்குத் தேவையான 2,394 கூடுதல் வகுப்பறைகள், 51 ஆய்வகங்கள், 10 மாணவ, மாணவிகள் தங்குகின்ற hostel வசதி இவற்றிற்கெல்லாம் தனியாக 813 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதைப்பற்றி நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடம் நாங்கள் பேசியிருக்கிறோம். மிக விரைவில் அதை நாங்கள் தொடங்கி வைப்போம்.

முற்பகல் 10–45

உங்களுக்கே தெரியும். RD Department மூலமாக Elementary schools–க்கு என்று தனியாக 1000 வகுப்பறைகள் கட்டப்பட்டு, கடந்த மாதம் நம்முடைய தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இப்போது இந்த மாதத்தில் அடுத்த 1000 கட்டடங்கள் தயாரான நிலையில் இருக்கின்றன. அவற்றையும் நாங்கள் திறந்து வைக்கவிருக்கின்றோம். Elementary schools மட்டுமல்ல, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி என்று NABARD–ஐ சார்ந்து இருக்கின்ற அந்த நிதிகள் வரும்போது 85:15 என்ற விகிதத்தில் மாநில, ஒன்றிய அரசுக்கான பங்கீட்டில் அவற்றுக்கான பணிகளையும் மிக விரைவில் தொடங்கவிருக்கிறோம். உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி என்று வரும்போது, மிக விரைவாக அதற்கான கட்டடங்களும் கட்டி முடிக்கப்படும். அதில் உங்களுடைய பள்ளியிலும் வகுப்பறை தேவை ஏற்படும்போது கட்டித் தரப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

2023 அக்டோபர் 10]

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத்தில் முஞ்சிறை அரசு மேல்நிலைப் பள்ளியும், கொல்லங்கோடு நகராட்சியில் கொல்லங்கோடு அரசு மேல்நிலைப் பள்ளியும் அமைந்துள்ளன. இந்த இரண்டு பள்ளிகளில் அதிகமாக மாணவ, மாணவியர்கள் படித்து தேர்ச்சி பெற்று வருகின்றனர். ஆனால், அந்த இரண்டு பள்ளிகளிலும் கட்டடங்கள் மிகவும் சிதிலமடைந்திருக்கின்றன. அந்தக் கட்டடங்களை போர்க்கால அடிப்படையில் சரி செய்து தர வேண்டுமென்று தங்கள் மூலமாக நான் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன மாதிரிதான். 418 பள்ளிக்கூடங்கள் இல்லாமல் மேலும் 173 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிக்கூடங்களுக்கு இன்றைக்கு கிட்டத்தட்ட 215 கோடி ரூபாய்க்கு உட்கட்டமைப்பு வசதிக்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இது இல்லாமல், கூடுதலாக இன்னும் 252 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் கணக்கீடு செய்யப்பட்டு, அவற்றிற்கென்று தனியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இவை மட்டுமல்ல, அந்தந்தப் பகுதியைச் சார்ந்து இருக்கின்ற CEOs மூலமாக local–ல் இருக்கின்ற அந்தந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுக்கின்ற அந்தப் பட்டியலில் உள்ளவற்றிற்கும், பத்திரிகைச் செய்தி மூலமாக வருகின்றவற்றிற்கும் நாங்கள் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, அதற்கும் இன்றைக்குத் தனியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிதியெல்லாம் வரவர, அவற்றுக்கான வேலைகள் உடனடியாக நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடம் எடுத்துச்சொல்லி மிக விரைவாக நடைபெறும். ஏனென்றால் two weeks முன்னர், அவர்கள் Department சார்ந்து ஒரு கூட்டமே போட்டிருக்கிறார்கள். அவர்கள் ஒரு target fix செய்திருக்கிறார்கள். இத்தனை மாதத்திற்குள் இத்தனைக் கட்டடங்கள், இத்தனை வகுப்பறைகள் கட்டி முடிக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

அதையும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று இன்னும் விரைவாக அந்தப் பணிகளை முடிக்கின்ற பணியில் நாங்களும் எங்களை ஈடுபடுத்திக்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.

திரு. செ. ஸ்டாலின் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய துறையூர் தொகுதி, துறையூர் நகரத்தில் 1971 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பள்ளியின் பழமையான கட்டடத்தில் 1600 மாணவிகள் பயின்று வருகின்றனர். பெண்களுக்குக் கல்வி வழங்கிட திட்டமும், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்க சட்டமும் தந்த முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் இப்பள்ளி தோற்றுவிக்கப்பட்டது. இப்பள்ளியானது ஏற்கெனவே முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் பெயரில் இயங்கிவந்தது. தற்போது அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. கலைஞர் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் இந்தத் தருவாயில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் பெயரில் இப்பள்ளியை முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி என்று பெயர் மாற்றம் செய்தும், 25 புதிய வகுப்பறைகளும், ஆய்வகக் கட்டடமும் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இது சார்ந்து என்னிடம் பலமுறை அதற்கான கோரிக்கையை வைத்திருக்கிறார். நாங்களும் துறையூர் பகுதிக்குச் செல்லும்போதெல்லாம் அதனைப் பார்வையிட்டிருக்கின்றோம். கண்டிப்பாக இன்றைக்கு இருக்கின்ற சட்டதிட்ட விதிகளின்படி—ஏனென்றால், அன்றைக்கு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் உயிருடன் இருந்தபோது வைத்த பெயர். இப்போது அதற்கான சட்டதிட்டங்களும் மாற்றப்பட்டிருக்கின்றன என்பதால் அதை எடுத்திருக்கிறார்கள்.

2023 அக்டோபர் 10]

இருந்தாலும், துறை சார்ந்து அதற்கான சாத்தியக்கூறு என்ன என்பதை அறிந்துகொள்வோம்.

அதேபோன்று, கட்டடங்கள் கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நான் சொன்ன பதில்தான் எல்லாவற்றிற்கும் பொருந்தும். ஆக அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படும்பொழுது, ஏற்கெனவே சட்டமன்றத்தில் இருக்கின்ற பல்வேறு இயக்கத்தைச் சார்ந்திருக்கிறவர்கள் இந்தக் கட்டடங்களைப் புதுப்பித்துத் தரவேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அதை நாங்கள் நிறைவேற்றித் தருகிறோம். அதுமட்டுமல்லாமல், **166** கோடி ரூபாய் Maintenance and Repair (M&R)–க்கு என்று தனியாக ஒதுக்கீடு செய்து, ஒவ்வொரு CEOs–க்கும் நாங்கள் அனுப்பியிருக்கிறோம். உடனடியாகச் செய்ய வேண்டிய பணிகளுக்காக நம்முடைய CEOs மூலமாக அந்த நிதி ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தப் பணிகளை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். வருங்காலத்தில் நீங்கள் கேட்கின்ற பள்ளிக்கூடக் கட்டடங்கள், புதிய வகுப்பறைகள், ஆய்வகங்கள், கழிவறைகள் என எதுவாக இருந்தாலும் உடனடியாகக் கட்டுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் நாங்கள் செய்வோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 216, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

216—

குடமுழுக்கு

***52502—திரு. ஆ. அருண்மொழிதேவன்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரியில் உள்ள அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயிலைப் புனரமைத்து, குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*